# “புகழ் அனைத்தும் உமதே”

## வாரம் 2020

## 16 – 24 மே 2020

## அனைத்தும் தொடர்புடையனவே!



**மனிதவள மேம்பாட்டு அலுவலகம்**
**காலநிலை மாற்றப் பிரிவு**
**ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பு (FABC)**
**தமிழக சமூகப் பணி மையம் (TASSOS), திருச்சி**

**இணையதளப் பங்காளர்கள்**

ஒருங்கிணைந்த மனிதவள மேம்பாட்டுக்கான வத்திக்கான் ஆணையம்

உலகளாவிய கத்தோலிக்க காலநிலை இயக்கம்

# "புகழ் அனைத்தும் உமதே"

## வழிபாட்டு வாரம் 2020

## 16–24 மே 2020

அனுமதி

மேதகு பேராயர் அந்தோணி ஆனந்தராயர்
தலைவர், தமிழக ஆயர் பேரவையின்
திருவழிபாட்டுப் பணிக்குழு

தயாரிப்பு

அருள்பணி. முனைவர் S. அற்புதராஜ்
பொதுச் செயலர்
தமிழகத் திருவழிபாட்டுப் பணிக்குழு
முப்பணி மையம், திண்டிவனம்
2020

வரலாற்றையே மாற்றும் நிகழ்வுகளின் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து நல் உலகை எவ்வாறு கட்டியெழுப்பவேண்டும் என்பதை "புகழ் அனைத்தும் உமதே" (Laudato Si) என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது மடல் நமக்கு கற்பிக்கிறது. மக்கள் எல்லா இடத்திலும் ஒரு எதிர்பார்ப்புடன், நம்பிக்கைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பாதைக்கு ஒளியூட்ட இறை நம்பிக்கை நம் உடனடித் தேவையாக உள்ளது. மே 16–24, 2020–ஐ முன்னிட்டு "புகழ் அனைத்தும் உமதே" வாரத்தைக் கொண்டாட நேர்மையான, நிலையான எதிர்காலத்திற்காக கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நாம் தோழமையில் ஒன்றிணைகின்றோம். சிறந்த நாளைய எதிர்காலத்தை கட்டியெழுப்பும் வண்ணமாக இந்நெருக்கடியான காலத்தில் சகோதர, சகோதரிகளாக நம்பிக்கையில் ஒன்றிணைந்து நிற்கிறோம்.

## எனவே நாம் செய்யவேண்டியவை :

- மே 16–23 வரை மேற்கண்ட இலக்கினைச் சிந்தித்து சமூகத் தொடர்பு ஊடகங்கள் வழியாக இதற்காகத் தயாரிக்கலாம், தியானிக்கலாம்.
- மே 24, 2020–ல் உலகளாவிய இறைவேண்டல் நாளில் இணையலாம்.
- நாம் தயாரிப்பவற்றை 2020 செப்டம்பர் 1–லிருந்து அக்டோபர் 2020 வரையிலான படைப்பின் காலத்தின்போது செயல்படுத்தலாம்.

**பல்வேறு மூலங்களிலிருந்து இந்தக் கையேடு தயாரிக்கப்பட்டிருக்கிறது**

| தேதி | நாள் | பரிந்துரைக்கப்படும் செயல்பாடு |
|---|---|---|
| 16 மே 20 | சனி | ஆன்ம சோதனை |
| 17 மே 20 | ஞாயிறு | படைப்பிற்காக "புகழ் அனைத்தும் உமதே" செபம் |
| | | You Tube–ல் காணொளி பார்த்து தியானித்தல் |
| 18 மே 20 | திங்கள் | செபமாலை செபித்தல் – மகிழ்வின் மறையுண்மை |
| 19 மே 20 | செவ்வாய் | செபமாலை செபித்தல் – துயரின் மறையுண்மை |
| 20 மே 20 | புதன் | செபமாலை செபித்தல் – மாட்சியின் மறையுண்மை |
| 21 மே 20 | வியாழன் | செபமாலை செபித்தல் – ஒளியின் மறையுண்மை |
| 22 மே 20 | வெள்ளி | கார்பன் பதிவுக்கான அமர்வு |
| | | இறை இரக்க செபமாலை |
| 23 மே 20 | சனி | "புகழ் அனைத்தும் உமதே" உறுதிமொழி |
| | | தனிப்பட்ட அர்ப்பணம் |
| 24 மே 20 | ஞாயிறு | இயற்கையோடு இணைந்து வாழ நடைமுறைப் பரிந்துரைகள் – சிந்திக்க, தியானிக்க |
| | | உலகளாவிய இறைவேண்டல் நாள் |

# இயற்கையை நேசித்து வாழ்வதற்கான செயலாக்கப் பரிந்துரைகள்

### (LAUDATO SI = புகழ் அனைத்தும் உமதே!)

### 24 மே 2020, "ஞாயிற்றுக்கிழமை

#### நம்பிக்கை அணுகுமுறை

1. படைப்போடு தொடர்பிலிருத்தல் : படைப்போடு நமக்குள்ள பிணைப்பை எவ்வாறு ஆழப்படுத்துவது? இயற்கைச் சூழலில் நடைப்பயிற்சி செய்தல். மலையேறுதல் மற்றும் முகாம் அமைத்தல்.
2. இயற்கையோடு இணைந்து மன்றாடுதல். இயற்கைச் சூழலில் தியானிக்கப் பழகுவதன் வழியாக இயற்கையில் உறைந்திடும் இறைப்பிரசன்னத்தைக் கண்டுணர்தல்.
3. படைப்பிற்காகச் செபித்தல் : காயப்படும் பூமி, ஏழைகள், அனைத்து படைப்பிற்காகவும் மற்றும் நமது சார்பாகப் போராடும் சுற்றுப்புறச் சூழல் – தூதுவர்களுக்காகவும் செபித்தல்.
4. சூழல் தியானம் : சூழல் தியானங்களில் பங்கேற்றல்.

#### விழிப்புணர்வு

1. விழிப்புணர்வு அமர்வுகள் : காலநிலை மாற்றங்கள் மற்றும் உலகில் அவை ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்த பல்வேறு விழிப்புணர்வு கருத்தமர்வுகளில் பங்கேற்றல்.
2. "புகழ் அனைத்தும் உமதே" *"Laudato Si'"* சுற்றுமடல் : திருத் தந்தையின் இச்சுற்றுமடலின் பல்வேறு பகுதிகளைக் குடும்பமாகவோ, குழுக்களாகவோ கலந்தாலோசித்தல்.
3. விவிலியம் மற்றும் மரபில் படைப்பு : விவிலியம் மற்றும் திரு அவையின் போதனையில் உள்ள படைப்புப் பற்றிய பகுதிகளைத் தெரிவு செய்து தியானித்தல்.
4. நீதியின் பரிமாணம் : இயற்கையின் அழுகுரலுக்கும் ஏழையின் அழுகுரலுக்கும் இடையே உள்ள தொடர்பைப் புரிந்துகொள்ளுதல்.

## ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள்

1. **ஆற்றல் செயல்திறன் :** வெந்நீர் வைப்பதற்கும், மின்சாரத்திற்கு சூரிய சக்தி கருவிகளைப் பயன்படுத்துதல். ஆற்றல் செயல்திறன் மிக்க LED விளக்குகள் போன்றவைகளைப் பயன்படுத்துதல்.

2. **நீர் சிக்கனம் :** நீர் மேலாண்மையைக் கடைப்பிடித்தல், நீர் வீணாவதைத் தவிர்த்தல். தார் மற்றும் சிமெண்ட் கலக்காத திறந்தவெளி மணற்பகுதிகள் சிலவற்றையெனும் பாதுகாத்தல்.

3. **கூட்டு மரம் :** இயற்கைக் கழிவுகளைக் கூட்டு உரமாக்குவதற்கு ஏதுவாக உருளைகள் அல்லது கிடங்குகளைப் பயன்படுத்துதல்.

4. **சுற்றுப்புறச் சூழல் – நட்புக் கொண்டாட்டங்களை ஊக்கப்படுத்துதல் :** முதலில் நமது பங்கு மற்றும் சமூகக் கொண்டாட்டங்களில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தி விட்டுத் தூக்கியெறியும் பொருள்களின் பயன்பாட்டை அறவே தவிர்த்தல். பொது நிகழ்வுகளில் எவர்சில்வர் அல்லது கண்ணாடி பாத்திரங்களைப் பயன்படுத்துதல். தனித்தனி உணவு பைகள் அல்லது பொட்டலங்களைத் தவிர்த்து ஒரு தாம்பளத்தில் உணவை வைத்துப் பரிமாறும் முறையைப் பின்பற்றுதல். இதுபோன்ற வழிமுறைகளையே நமது குடும்ப மற்றும் சமூகக் கொண்டாட்டங்களிலும் பின்பற்றும் வழக்கத்தை விரிவாக்கம் செய்தல்.

05. **கழிவுகள் உருவாக்கத்தைத் தவிர்த்தல் :** இயன்ற வரையில் பாடல் தாள்கள், சுவரொட்டிகள், ஒருமுறை மட்டும் பயன்படும் ஃப்ளக்ஸ் பதாகைகள் போன்றவற்றைத் தவிர்த்தல்.

06. **சமயலறைத் தோட்டம் :** வீடுகளில் இடம் இருந்தால் காய் கனித் தோட்டம் அமைக்கலாம்.

07. **காகித உறைகளை மறுசுழற்சி செய்தல் :** பதப்படுத்தப்பட்ட உணவுகள் அடைக்கப்பட்டு வரும் காகித உறைகளை ஏதேனும் ஒரு பொதுவான இடத்தில் சேர்க்கலாம். அவற்றை மறுசுழற்சிக்காக அவற்றிற்குரிய தன்னார்வ அமைப்புகளிடம் ஒப்படைக்கலாம்.

08. **அடக்கத்துணி :** இறந்த உடல்களை அடக்கம் செய்ய மரப்பெட்டிகளுக்கு (சவப்பெட்டிகளுக்கு) பதிலாக துணியில் சுற்றி புதைக்கும் முறையை ஊக்கப்படுத்தலாம்.

## வாழ்க்கை முறை

நமது தனிப்பட்ட வாழ்க்கை முறை, சூழல் கூருணர்வுத்திறன் கொண்டதாக அமைகின்றபோது, இயற்கையைக் காப்பதற்கான நமது முயற்சிகள் கூடுதல் நம்பகத்தன்மை பெறும். "பயன்பாட்டைக் குறை. மீண்டும் பயன்படுத்து, மறுசுழற்சி செய்" என்னும் மந்திரத்தை நாம் அறிந்திருக்கிறோம். இருப்பினும், எல்லாக் காலத்திலும் எல்லாப் பொருள்களையும் மீண்டும் பயன்படுத்துவது அல்லது மறுசுழற்சி செய்து என்பது சாத்தியமற்றது. எனவே நாம் பயன்படுத்தும் பொருள்களைக் குறைத்துக் கொள்வதே சிறந்த சூழல் செயல்பாடாக அமையும். எப்பொருளையும் வாங்குவதற்கு முன்பும் அல்லது பரிசுகளைப் பெறுவதற்கு முன்பும் இது உண்மையிலேயே தேவையா என்று யோசிக்கலாம். வாய்ப்புள்ளபோதெல்லாம் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தலாம் அல்லது நடக்கலாம். இப்பூமியின் மீது நமது காலதடத்தை இயற்கைக்கு உகந்த வகையில் மிக மென்மையாகப் பதிக்குமாறு நாம் மிகமிகக் கவனமுடன் செயலாற்ற வேண்டும். இதற்கு சுயதியாகம் தேவைப்படுகிறது. ஆனால் அச்சுய தியாகம் ஒரு மதிப்புக்குரிய முயற்சியாகும்.

## “புகழ் அனைத்தும் உமதே” *“Laudato Si’”* யின் ஐந்தாம் ஆண்டு நினைவுக் கொண்டாட்டத்திற்கான பொது மன்றாட்டு

### (இதனை 24 மே 2020 நண்பகல் வேளையில் செபிக்கவும்)

அன்பான இறைவா, விண்ணையும் மண்ணையும் அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்தவரே! நீர் எம்மை உம் சாயலாகப் படைத்து, படைப் பனைத்திற்கும், எங்களின் பொது இல்லமாம் இப்பூமிக்கும் பாதுகாவலராக ஏற்படுத்தினீரே. எல்லோரும் ஊட்டம் பெறும் வகையில் சூரியன், நீர் மற்றும் வளமான நிலம் இவற்றால் நீர் எங்களை ஆசீர்வதித்திருக்கின்றீர். உமது கொடையாம் படைப்பின் குரலுக்கு நாங்கள் செவிசாய்க்கும் படியாக எங்கள் உள்ளத்தையும் இதயத்தையும் திறந்தருளும். இப்போது இல்லம் எங்களுக்கானது மட்டுமல்ல. எதிர்கால சந்ததிகள் அனைத்திற்கும் உரியது என்கிற சுய உணர்வு கொள்ளவும், இதனைப் பாதுகாப்பது எங்கள் கடமை என்பதை உணர்ந்து கொள்ளவும் எங்களுக்கு உதவிபுரியும். ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையான உணவையும் இயற்கை வளங்களையும் பெற்றுக்கொள்ள நாங்கள் ஒருவர் மற்றவருக்கு உதவுவோமாக. இத்துயரக் காலத்தில் தேவையிலிருக்கும் ஒவ்வொருவருடனும், குறிப்பாக ஏழைகள், கண்டு கொள்ளப்படாமல் விடப்படக் கூடிய ஆபத்திலிருப்போருடன் நாங்கள் உடனிருக்க உதவிபுரியும். நாங்கள் உண்மையான மனமாற்றத்தை உணரும் படியாக எங்களின் அச்சம், கவலை, தனிமையுணர்வு ஆகியவற்றை எதிர்நோக்காக மாற்றியருளும். இவ்வுலகலாவிய தொற்றின் தாக்கத்தை எதிர்கொள்வதில் படைப்பாற்றலுள்ள ஒன்றிப்பை நாங்கள் வெளிப்படுத்த உதவியருளும். பொதுநலனுக்கான தேடலில் தேவைப்படுகின்ற மாற்றங்களை நாங்கள் ஏற்று செயல்பட எங்களை உற்சாகப்படுத்தியருளும். புவியின் அழுகையிலிருந்தும் ஏழைகளின் கண்ணீரிலிருந்தும் அவர்களை உயர்த்தும் எங்களின் முயற்சியில் நாங்கள் முன்னெப்பொழுதும் இல்லாத விதத்தில் இப்பொழுது ஒருவர் மற்றவரோடு தொடர்பில் உள்ளோம் என்பதை உணர்ந்துகொள்வோமாக. இம்மன்றாட்டை எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். **ஆமென்.**

**குறிப்பு :**

**மொழியாக்கத்தில் உதவிய அருள்பணி. L. ஆனந்தம் - மதுரை, அருள்பணி. அலெக்ஸ் ஞானராஜ் - மதுரை, அருள்பணி. ம. பிலோமின்தாஸ், இயக்குநர், TNBCLC அவர்களுக்கு நன்றிகள்.**